## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி

## அ.வ.எண்.55/2023

இந்நீதிமன்றத்து எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10 வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2025 ஆண்டு பிப்ரவரி மாதம் 6 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : முனிரத்தினம் | மதம் | : இந்து |
| த/பெ | : கோவிந்த மந்தடி | ஜாதி | : -- |
| வயது | : 75 | கிராமம் | : அருங்குளம் |
| தொழில் | : விவசாயம் | வட்டம் | : திருத்தணி |

**06.02.2025**

**வா.சா. 1 திரும்ப அழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. எனக்கு எழுதப்படிக்க தெரியுமா என்றால் தெரியாது. கையெழுத்து மட்டும் போட தெரியும். நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் நான் சொல்லித்தான் எனது வழக்கறிஞர் தயார் செய்தார் என்றால் சரிதான். பிரதிவாதிகளை எனக்கு எத்தனை வருடமாக தெரியும் என்றால் அவர்கள் பிறந்ததிலிருந்து எனக்கு தெரியும். என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் என் சொத்தில் அவர்கள் இடைஞ்சல் செய்தார்கள். அதனால் இந்த வழக்கு தாக்கல் செய்தேன்.

2. என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் இடம் வேண்டும் என தாக்கல் செய்தேன். என் சொத்து என நிரூபிக்க இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் ஆமாம். நான் எனது எனது பிராதிலும் எனது பிரமாண வாக்குமூலத்திலும் எங்காவது சொத்து அவர்களுடையது என சண்டை போடுவதால் இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என குறிப்பிட்டுள்ளேனா என்றால் நான் பிரச்சனை வந்தவுடன் காவல் நிலையம் போனேன். அவர்கள் நீதிமன்றம் போக சொன்னதால் இங்கு வந்தேன். என் அப்பா பெயர் என்ன என்றால் கோவிந்த மந்தடி ஆகும்.

3. என் அப்பாவின் சகோதரர்கள் பெயர் தெரியுமா என்றால் என் சித்தப்பா

பெயர் துரைசாமி மந்தடி ஆகும். அவர்களுடன் பிறந்த பெண்ணின் பெயர் எனக்கு தெரியவில்லை. நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் எங்காவது சொத்தின் புல எண், அடியளவுகள் சொல்லியுள்ளேனா என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. நான் எனது பிராதில் A அட்டவணை சொத்து முனி மந்தடியிடம் இருந்ததாக பத்தி 1 ல் சொல்லியுள்ளேன் என்றால் அவரது மகன்கள்தான் ஆரம்பத்தில் இருந்து பயிர் செய்து வந்தார்கள். முனி மந்தடியின் மகன்கள்தான் சஞ்சீவி மந்தடிக்கு எழுதி கொடுத்து சஞ்சீவி மந்தடி எனக்கு எழுதி கொடுத்தார்.

4. முனி மந்தடி எனக்கு என்ன உறவு என்றால் முனி மந்தடி எனக்கு யார் என்று தெரியாது. முனி மந்தடியின் மகன்கள் துரைசாமி மந்தடி, முனுசாமி, கோவிந்தம்மாள் ஆவார்கள். அவர்கள் சஞ்சீவி மந்தடிக்கு எழுதி கொடுத்து சஞ்சீவி மந்தடி எனக்கு எழுதி கொடுத்தார். 23.01.1969 ம் ஆண்டு முனி மந்தடி வாரிசுகள் சஞ்சீவி மந்தடிக்கு எழுதி கொடுத்ததாக நான் சொல்கிறேன் என்றால் நான் படிக்கவில்லை எனவே எனக்கு தெரியவில்லை. நான் தாக்கல் செய்த பிராதிலும், பிரமாண வாக்குமூலத்திலும் சொல்லியுள்ள முனி மந்தடி, முனி மந்தடியின் வாரிசுகள், சஞ்சீவி மந்தடி ஆகியோரது வாரிசு சான்று, இறப்பு சான்று ஆகிய ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேனா என்றால் எதுவும் கிடையாது.

5. 23.01.1969 ம் ஆண்டு முனி மந்தடி வாரிசுகள் சஞ்சீவி மந்தடிக்கு எழுதி கொடுத்ததாக நான் சொல்கிறேன் என்றால் ஆமாம். ஆனால் 05.02.1969 ல் அந்த ஆவணம் பதியப்பட்டதாக சார்பதிவாளர் அலுவலக வில்லங்க சான்றில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது. நான் தாக்கல் செய்த பிராதிலும், பிரமாண வாக்குமூலத்திலும் பிரதிவாதிகள் மீது நிரந்தர உறுத்துக்கட்டளை கேட்டுள்ளேன் என்றால் ஆமாம். ஆனால் வழக்கு சொத்து சம்மந்தமாக பிரதிவாதிகள் பெயருக்கு ஆவணங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் அது எனக்கு தெரியாது. நான் பொய்யாக சொல்கிறேன் என்றாலும் எனக்கு அனைத்து விவரங்களும் தெரியும் என்றாலும் நான் பிரதிவாதிகள் பெயரில் உள்ள ஆவணங்களை மறைத்து பொய்யாக உறுத்துக்கட்டளை பரிகாரம் பெற்றுள்ளேன் என்றாலும் இல்லை. நான் எதையும் மறைக்கவில்லை.

6. நான் தாக்கல் செய்த பிராதிலும், பிரமாண வாக்குமூலத்திலும் வழக்கு A அட்டவணை சொத்தை எந்த தேதியில் கிரயம் வாங்கியதாக சொல்லியுள்ளேன்

என்றால் தேதி ஞாபகமில்லை. A அட்டவணை சொத்தான புல எண்.288/3ல் 6 செண்ட் நிலத்தை யாரிடம் இருந்து வாங்கினேன் என்றால் சஞ்சீவி மந்தடி, கண்ணய்யா மந்தடி, ஜெயசங்கர் மந்தடி ஆகியோரிடம் இருந்து வாங்கினேன். எந்த வருடம் யார் பெயருக்கு கிரையம் வாங்கினேன் என்றால் என் பெயரில் வாங்கினேன். வருடம் ஞாபகமில்லை. நான் 28.07.1988ல் ஆவணம் பதிவு செய்துள்ளேன் என்றாலும் அதற்கு முன்பே 26.07.1969ல் சஞ்சீவி மந்தடி, கண்ணய்யா மந்தடி, நரசிம்ம மந்தடி ஆகியோர் சொத்தை கோவிந்த மந்தடிக்கு அடமானம் வைத்துள்ளனர் என்றால் ஆமாம். அது எனக்கு தெரியாது.

7. எனக்கு அந்த ஆவணம் கொடுத்த விவரம் தெரியாது என்றால் சரிதான். நான் 1988ல் கிரையம் வாங்கும் முன்பே 1ம் பிரதிவாதியின் தகப்பனார் 29.12.1972ல் சஞ்சீவி மந்தடி, அந்தி மந்தடி ஆகியோரிடம் இருந்து கிரையம் பெற்றுள்ளார் என்றால் சொத்து என்னிடம்தான் உள்ளது. சொத்து என்னிடம்தான் உள்ளது என நான் சொல்கிறேன் என்றால் ஆமாம். சொத்து என் அனுபவத்தில் உள்ளது என்பதை காட்ட பட்டா, சிட்டா, அடங்கல் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தெரியவில்லை. புல எண்.288/3ல் 6 செண்ட் நிலம் பிரதிவாதிகள் அனுபவத்தில் உள்ளது என்பதற்கு பிரதிவாதிகள் ஆவணம் தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் ஆவணம் வைத்துள்ளதாக என்னிடம் சண்டைக்கு வந்தார்கள். நாங்கள் காவல் நிலையம் சென்றுவிட்டு இந்த வழக்கை தாக்கல் செய்தோம்.

8. நான் 2 புல எண்களுக்கு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் புல எண்.288/2, 288/3 என்றாலும் சரிதான். அதற்கான கணினி பட்டா எண்.2544 என்றால் எனக்கு சரியாக தெரியவில்லை. மேற்படி பட்டாவில் புல எண்.288/3 இல்லை என்றால் பட்டா மாறியிருக்கும். நான் கிரையம் வாங்கியதாக சொல்லும் தேதியில் இருந்து இந்த பிராது தாக்கல் செய்யும் வரையிலான காலக்கட்டத்திற்கு பட்டா என் பெயருக்கு வந்ததா பிரதிவாதி பெயருக்கு மாறியதா என்பதற்கான ஆவணங்கள் இதுவரை தாக்கல் செய்துள்ளேனா என்றால் பத்திரம்தான் தாக்கல் செய்துள்ளேன்.

9. புல எண்.288/3ல் விஸ்தீரணம் 6 செண்ட் உண்மையில் எனது அனுபவத்தில் இருந்திருந்தால் பட்டா சிட்டா, வரி ரசீது தாக்கல் செய்திருப்பேன் என்றால் நான் பட்டா வாங்கியிருந்தேன். ஆனால் அதில் ஒரு புல எண்

விட்டுபோயிருப்பதாக சொன்னார்கள். ஆனால் நான் படிக்காததால் எனக்கு தெரியவில்லை. புல எண்.288/2ல் விஸ்தீரணம் 2 1/2 செண்ட்டான பி அட்டவணை எனது பூர்வீக சொத்து என் சொல்லியுள்ளேன் என்றால் ஆமாம். புல எண்.288/2ல் விஸ்தீரணம் 2 1/2 செண்ட்டான பி அட்டவணை எனது பூர்வீக சொத்து என்பதை காட்ட ஏதேனும் ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் பட்டா தாக்கல் செய்துள்ளேன்.

10. பட்டா எத்தனையாவது ஆவணமாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் தெரியவில்லை. நான் தாக்கல் செய்துள்ள பட்டாவின் பட்டா எண் சொல்ல முடியுமா என்றால் இல்லை. எனது பிரமாண வாக்குமூலத்தில் பட்டா எத்தனையாவது ஆவணமாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் தெரியவில்லை. படிக்காததால் தெரியவில்லை. படித்திருந்தால்தான் தெரியும். புல எண்.288/3, 288/2 மொத்தம் 8 1/2 செண்ட் நிலம் முனி மந்தடி மற்றும் அயினு மந்தடி ஆகியோருக்கு பாத்தியப்பட்ட சொத்து என்று பிரதிவாதிகள் அதற்கான SLR சான்றிடப்பட்ட நகல் தாக்கல் செய்துள்ளனர் என்றால் தெரியாது. அதை நீதிமன்றம்தான் நிரூபணம் செய்ய வேண்டும்.

11. புல எண்.288/2ல் விஸ்தீரணம் 2 1/2 செண்ட்டான பி அட்டவணை எனது பூர்வீக சொத்து இல்லை என்றாலும் அது முனிமந்தடி, அயினு மந்தடிக்கு சொந்தமான சொத்து என்றாலும் சரியல்ல. புல எண்.288/3, 288/2 நான் அனுபவித்து வந்திருப்பதை காட்ட அடங்கல் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. புல எண்.288/3, 288/2 ஆகிய இரண்டு சொத்துக்களுமே என் கைவசம் இல்லாததால்தான் நான் சிட்டா, அடங்கல் போன்ற வருவாய் ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. புல எண்.288/3, 288/2 ஆகிய சொத்துக்கள்1ம் பிரதிவாதயின் அப்பா 1972ல் கிரையம் பெற்று அதுமுதல் அவர் அனுபவித்து வந்து அதன்பிறகு பிரதிவாதிகள் அனுபவித்து வருகிறார்கள் என்றால் இல்லை.

12. நான்தான் சொத்தை அனுபவித்து வருகிறேன் என்பதற்கான ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் பத்திரம்தான் தாக்கல் செய்துள்ளேன். புல எண்.288/3க்கான சொத்தை நான் 1988ல்தான் கிரையம் வாங்குவதற்கு 16 வருடத்திற்கு முன்பே 1ம் பிரதிவாதியின் அப்பா கிரையம் வாங்கியுள்ளார் என்றால் அதற்கு முன்பே சஞ்சீவி மந்தடி வாங்கியுள்ளார். அந்த சொத்தை 1ம் பிரதிவாதியின்

அப்பா குப்பு மந்தடி ஆண்டு அனுபவித்து வந்து பட்டா, வருவாய் ஆவணங்கள் அவர் பெயரில் உள்ளது என்றால் இல்லை.

13. 1, 2 பிரதிவாதிகள் சொத்து குப்பு மந்தடிக்கு பாத்தியம் என்பதை காட்ட பட்டா பாஸ்புக் எண்.249 ஐ தாக்கல் செய்துள்ளனர் என்றால் நான்தான் அனுபவித்து வருகிறேன். எனது பெரியப்ப துரைசாமி மந்தடியும் என் அப்பா கோவிந்த மந்தடியும் பாக ஆவணம் எழுதியதாக சொல்கிறேன் என்றால் ஆமாம். நான் அந்த பாக ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் பொய்யாக சொல்கிறேன் என்றாலும் அந்த பாக ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை என்றாலும் சரியல்ல. புல எண்.288/3, 288/2 சொத்துக்களை நான் என் மகன்களுக்கு 2017 ல் பாகம் பிரித்து கொடுத்துள்ளேன் என்றால் ஆமாம். பட்டா எதுவும் என் மகன்கள் பெயருக்கு மாறியுள்ளதா என்றால் என் மகன்கள் பெயருக்கு மாறியுள்ளது.

(குறுக்கு விசாரணை தொடர்ச்சி வழக்கறிஞர் வேண்டுகோளின்படி ஒத்திவைக்கப்படுகிறது)